International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

மொழியியல் அறிஞர்களின் தமிழியல் ஆய்வுக் கருதுகோள்களும் கருத்துருவாக்க முறைகளும்

முனைவர் த. இராகுல்காந்தி
உதவிப்பேராசிரியர்
பன்முகக் கலை (ம) வணிகக்கல்விப் புலம்
எஸ்.ஆர்.எம். அறிவியல் (ம) தொழிநுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு - 603 203

ஆய்வுச்சுருக்கம்

மொழியியல் என்பது அறிவியல் முறைக் கல்வி. எழுத்துகளின் ஒலி எங்கிருந்து பிறக்கிறது? அவற்றின் ஒலிப்புமுறைகள், அடிச்சொற்களின் மீது ஒட்டுகளைச் சேர்ப்பதால் ஏற்படும் பொருள் மாற்றம், பொருளைக் கட்டமைக்கும் முறைகள் என மொழியியலில் கோட்பாடு சார்ந்த ஆய்வுகள் நடைபெற்று வந்துள்ளன. ஒலி, ஒலியன், உருபு, உருபன், உருபொலியன், தொடர், பொருண்மை ஆகியன ஆரம்ப கால மொழியியல் பிரிவுகளாகக் காணப்படுகின்றன. இன்று கணினி மொழியியல், உளமொழியியல், நரம்பு மொழியியல் என மொழியியல் ஆய்வுப் போக்கு விரிவடைந்து வருகின்றது. பேச்சு மொழி மற்றும் எழுத்து மொழியை அடிப்படையாக வைத்தே மொழியியல் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அயல்நாட்டு மொழியியல் அறிஞர்களைத் தவிர்த்து, தொடக்கக் காலத்தில் மொழியியல் ஆய்வுகளை முன்னெடுத்த அறிஞர்கள், தமிழ்மொழியில் ஆழ்ந்தப் புலமையுடையவர்களாகத் திகழ்ந்தனர். அவர்களுடையத் தொடக்கால ஆய்வுகள் தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டே இருந்துள்ளன. தமிழின் சான்றுகளை ஆய்வுகளின் வழி உலகறியச் செய்தவர்களுள் மொழியியல் அறிஞர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. அப்பங்களிப்புகளில் தமிழியல் ஆய்வுகளில் கருதுகோள்களை எவ்வாறெல்லாம் கட்டமைத்துள்ளனர் என்பதையும் அவற்றிற்கான கருத்துருவாக்கங்களை எவ்வாறெல்லாம் செய்துள்ளனர் என்பதையும் கண்டறியும் நோக்கில் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

முதன்மைச் சொற்கள்: தமிழியல் -மொழியியல் – கருதுகோள் – கருத்துருவாக்கம்.

ஆய்வுப் பங்களிப்பு

தமிழியல் ஆய்வாளர்களுக்குக் 'கருதுகோள்' என்ற ஆய்வு நெறிமுறை புரிதலை ஏற்படுத்தி, 'கருதுகோள் கட்டமைத்தல்' முறைகளைத் தெளிபடுத்தும். கருத்துரு செய்யும் முறைகளை அறிந்துகொணடு, புதிய முடிவுகள் மற்றும் புதிய சிந்தனைகளை அடைய வழிவகுக்கும். தமிழியல் ஆய்வுகளின் செம்மையாக்கத்திற்கு இவ்வாய்வுப் பங்களிப்பு செய்யும்.

ஆய்வு அணுகுமுறை

மொழியியல் அறிஞர்களில் தொ.பொ.மீனாட்சிசுந்தரம், வ.அய்.சுப்ரமணியம், அகத்தியலிங்கம் ஆகியோரின் ஆய்வுகளில் இடம் பெற்றுள்ள, தமிழியல் ஆய்வுக் கருதுகோள்கள் மற்றும் கருத்துருவாக்கங்கள் எவ்வாறெல்லாம் கட்டமைக்கப்பட்டள்ளன என்பதைத் தொகுத்து விளக்குவதால் விளக்கவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

முன்னுரை

மொழியியல் ஓர் அறிவியல் துறையாக உருவாவதற்கு முன்பே பல்வேறு காலக்கட்டங்களில் ஆராயப்பட்டுக் கருத்துகளை வெளியிட்டுள்ளது. இதைத் தமிழ் இலக்கண மரபின் வளர்ச்சியும் வரலாறும் புலப்படுத்துகிறது. பேச்சுமொழி மற்றும் எழுத்து மொழி ஆகியவற்றை முதன்மைப்படுத்தி மொழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒலி, எழுத்து, சொல், தொடர், பொருண்மை, அமைப்பு ஆகியவற்றை முதன்மைப்படுத்தி முன்னெடுக் கப்பட்ட கோட்பாட்டு ஆய்வுகள் தொடக்கக்கால ஆய்வுகளாக வெளிவந்துள்ளன. இன்று உள மொழியியல், கணினி மொழியியல், நரம்பு மொழியியல், பயனாக்க மொழியியல் எனப் புதிய புதிய துறைகளை நோக்கி மொழியியல் ஆய்வுகள் விரிவடைந்து செல்கின்றன. மு.வரதராசனார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், ச. அகத்தியலிங்கம், வ.அய். சுப்பிரமணியம், பொற்கோ, செ.வை.சண்முகம், செ.சண்முகம், க.பாலசுப்பரமணியம் போன்றோர் மொழியிய லில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டு ள்ளனர். அதே சமயம் தமிழியல் ஆய்வுகளிலும் தங்கள் பங்களிப்புகளைச் செய்துள்ளனர். அயல்நாட்டினர் உள்ளிட்ட அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், தமிழ்மொழியின் தொன்மை, சிறப்பு, செல்வாக்கு, வளம், ஆற்றல் ஆகியவற்றை ஆய்வுசெய்து தங்கள் கருத்துகளை மொழியியலாளர்கள் முன்வைத்து உள்ளனர்.

தமிழியல் ஆய்வு

தமிழின் பன்மைத்துவத்தை ஆய்வது தமிழியல் ஆய்வு ஆகும். தமிழரின் பண்பாடு, பழக்கவழகம், நாகரீகம், வரலாறு, தொழில், கலை, இலக்கியம், இலக்கணம், பயன்பாட்டுக் கருவிகள், சடங்குகள், விழாக்கள், தொன்மை, சிறப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் தமிழியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழியல் என்பதற்கு, க்ரியா தற்காலத் தமிழ் அகராதி, *தமிழ்மொழி, பண்பாடு, அறிவியல் துறைகள் முதலியன பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வு (Study Related to Tamil Language, Peopele and Culture; Tamilology).* (க்ரியா, 2020, தற்காலத் தமிழ் அகராதி, ப.507) என்று பதிவுசெய்து விளக்கியுள்ளது. தமிழியல் ஆய்வுகளைக் கோட்பாட்டு அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும் என்பது தற்காலத் தமிழியல் ஆய்வு அறிஞர்களின் கருத்தாக வெளிப்படுகிறது. தமிழியல் ஆய்வுகளில் ஆய்வு நெறிமுறைகளை முறையாகப் பின் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வு அறிவியல் முறை ஆய்வாகும். நெறிமுறைகளைப் பின் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் 'கோட்பாட்டு ஆய்வு' முதன்மைப் படுத்தப் படுகிறது.

சமூகவியல் ஆய்வுகளில் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டு கருதுகோள் கட்டமைக்கப் படுகிறது. இத்தகைய கருதுகோள்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வு அறிவியல் முறை ஆய்வு. இதனை, செ. சண்முகம் **'அறிவியல் நோக்கில் மொழி'** என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனார். **இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் ஆய்வு நெறி முறைகள், கருதுகோள்களின் வாயிலாக உண்மையை நிறுவவேண்டும் என்ற அடிப் படையில் அமைகின்றன. இதன்படி நமது அனுபங்களைப் பயன்படுத்தி, கருதுகோள்களை உருவாக்கி, அதிலிருந்து உரிய உண்மைகளை ஊகித்து, அவைகளைச் சோதித்து நிலை நாட்டுதல் என்ற வழிமுறைகள் அறிவியல் சார்ந்தவை எனக் கருதப்படுகின்றன** (சண்முகம், செ., 2009, அறிவியல் நோக்கில் மொழி, ப.03) என்று குறிப்பிட்டுள்ளார். கருதுகோள் உருவாக்கத்திற்ககுத் தேவையான அனுபவங்கள், நுட்பமற்றதாகவோ, தற்சார்புத் தன்மைக் கொண்டதாகவோ அமையலாம். ஆகவே அவற்றை விளக்கும்போது துல்லியமாக விளக்கவேண்டும். கருதுகோள் உருவாக்கம் மற்றும் விளக்கம் என்ற இரண்டு அடிப் படைகளை முதன்மைப் படுத்தியே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கருது கோள் அடிப்படையான கருத்தை முன்வைக் கலாம். ஐயம் மற்றும் கேள்வி நிலையில் இருக்கலாம். தெளிவு மற்றும் விளக்கத்தை முன்வைக்காலம். எனவே கருதுகோள்களும் கருத்துருவாக்க முறையும் ஆய்வுகளில் முதன்மைப்படுத்த வேண்டிய நெறிமுறைக் கூறுகளாகும்.

கருத்துருவாக்கம்

எழுத்து, சொல், தொடர் ஆகியவற்றால் மொழி கருத்துருவாக்கம் செய்யப்படுகிறது. கருத்துருவாக்கத்திற்கு ஆய்வாளர் சிந்தனை முதன்மையாகத் திகழ்கிறது. ஆய்வுகளில், துணைத் தலைப்புகளின் விளக்கப் பகுதி இறுதியிலும் ஆய்வின் முடிவுரையிலும் கருத்து ருவாக்கங்கள் செய்யப்படுகின்றன. இத்தகைய, கருத்துருவாக்கம் முதன்மைத் தரவுகளின் அடிப்படையிலும் துனைமைத் தரவுகளின் அடிப்படையிலும் உருவாக்கப்படுகின்றன. முதன்மைத் தரவு மற்றும் துனைமைத் தரவு ஆகிய இருவேறு தரவுகளைக் கொண்டும் கருத்துகள் உருவாக்கப்படுகின்றன. மேலும்

முன்னாய்வுத் தகவல்களும் கருத்து உருவாக்கத்திற்குத் துணைசெய்கின்றன. இக் கருத்துருவாக்கம் தமிழியல் ஆய்வுகளில் தரவுகளை விளக்கி, தொகுத்து, ஒப்பிட்டு, பகுப்புசெய்வது எனப் பல்வேறு நிலைகளில் செய்யப்படுகின்றது. மற்றவர்கள் கருத்துகளை அப்படியே தனது கருத்தாகக் காட்டுவது. ஏற்கனவே வந்த கருத்தை அப்படியே ஏற்றல், விமர்சனம் அல்லது மாற்றுக் கருத்தை முன்வைத்தல் போன்ற தன்மைகளில் அமைவதையும் காணலாம். இன்றைய ஆய்வு இதழ்கள் பெரும்பான்மை புதிய கருத்து, ஆய்வுநெறிமுறை, சமூகப்பயன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயல்படுவதைக் காண முடிகிறது. இக்கருத்துருவாக்கம் கருகோள்களை முதன்மைப்படுத்தியே அமையவேண்டும்.

மொழியியல் அறிஞர்களின் தமிழியல் கருதுகோள்களும் கருத்துருவாக்கமும்

மொழியின் தொன்மையைக் கண்டறிவதற்கான ஆய்வுக்கோட்பாடுகளில் வளர்ச்சிப் படிநிலைக் கோட்பாடு முதன்மையிடம் வகிக்கிறது. இக் கோட்பாடு உயிரியல் மாற்றங்களை ஆராய் வதற்கே முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. உயர்தனிச் செம்மொழி, தொன்மையான மொழி, கன்னித் தமிழ் போன்ற தொடர்கள் தமிழில் காணப்படுகின்றன. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், தமிழ்மொழி புதுமையான மொழி என்று மொழி வளர்ச்சிக் கோட்பாட்டை உட்படுத்திச் சான்றுகளை விரிவாக எடுத்து உரைக்கத் தனது கருதுகோளை உருவாக்கி உள்ளார். அவை, **இழிவழக்குகளின் வரலாறு (History of Corruption) என்பதிலிருந்து வேறுபட்ட, தமிழ்மொழி வரலாறு என்பது புதுமையானது** (மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., 2021, பக்கம்:1) என்ற கருதுகோளை முன் வைத்துத் தனது ஆய்வை மேற்கொண்டார். இக் கருதுகோளுக்கான கருத்துருவாக்கம் தமிழ்மொழியின் பரிணாமங்களைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். தமிழ்மொழிக்கான அடிப் படைச் சான்றுகளான, **இலக்கியம், இலக்கண நூல்கள், உரையாசிரியர், வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுகள், பிறமொழிக் கல்வெட்டுகள், ஆவணங்கள், பிறமொழியாளர் குறிப்புரைகள், கிளைமொழிகள், ஒப்பியல் முறைகள்** (மீனாட்சி சுந்தனரனார், தெ.பொ., 2021, பக்கங்கள்:11-20) ஆகியவற்றை குறிப்பிட்டுத் தமிழ்மொழியின் தொன்மைக்கான சான்றுகளை எடுத்துரைத்து விளக்கியுள்ளார்.

சங்ககாலத் தமிழ் என்ற ஆய்வில், தொல்காப்பியத்தில் காணப்படும் இலக்கண விதிகளில் சிலவற்றைத் தவிர மற்ற அனைத்து விதிகளும் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன என்கிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். அவை **தொல்காப்பியத் தமிழில் காணப்படும் சில போக்குகள் சங்ககாலத்தில் நன்கு நிலைபெறுகின்றன. தொல்காப்பியத் தமிழ் சில மாற்றங்களைத் தவிர, முழுக்க முழுக்கச் சங்ககாலத் தமிழேயாகும்** (மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., 2021, ப.126) என்ற கருகோளைக் கொண்டு தனது கருத்தைக் கட்டமைத்துள்ளார். இக்கருதுகோளுக்கான கருத்துருவாக்கமாக, **இலக்கண உருபுகளில் மாற்றம் (மருவி), உயிர் மாற்றம் (எகர–அகர) (ஊகரம்–ஆகாரம்), இடையண்ண ஒலிக்கு (ச், ஞ், ய்) பின்னர் அகரம், குற்றியலுகரம், மென்மை அல்லது மூக்கினச் சாயலை இழத்தல் (ஆன்-ஆல் ஆகிறது, இன்–இல் ஆகிறது. வேண்- வேள் ஆகிறது), மூக்கு சாயல் பெறுதல் (அங்ஙனம்–இங்ஙனம் என எழுதப்படுகிறது) வினைகள் பொது, முற்றுகள் (தன்மை, முன்னிலை, வியங்கோள், படர்க்கை), எச்சம், துணைவினைகள்** (மீனாட்சிசுந்தரானர், தொ.பொ.,2021,பக்.127-141) எனத் தொல்காப்பி யத்தில் உள்ள பல்வேறு இலக்கணக் கூறுகள் மாறாமல் சங்க இலக்கியங்களில் இடம்பெற்று உள்ளன என்பதை விரிவான சான்றுகளுடன் கருத்துருவாக்கம் செய்துள்ளார்.

வ.அய். சுப்ரமணியம், தமிழியல் சார்ந்த பல்வெறு பணிகளை மேற்கொண்டுள்ளார். புறநானூற்றுச் சொல்லடைவு, தமிழும் சமஸ்கிருதமும், சேரர் வரலாற்று மீட்டுரு அளித்தல், மண வகை, தமிழ் இலக்கிய வரலாற்றில் நாளிகைக் கற்கள் எனப் பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்து, தனது ஆய்வு முடிவுகளை வழங்கியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் நாளிகைக் கற்கள் என்ற ஆய்வில் காலத்தைக் கணித்தலில், **மறைமுகச் சான்றுகள் ஒவ்வொன்றும் காலக் கணிப்பிற்கு உதவ இயலாமல் போனாலும் அவை அனைத்தையும் சேர்த்து இணைத்துக் கால உறுதிப்பாட்டிற்குப் பயன்படுத்த இயலும்** (வ.அய். சுப்ரமணியம் கட்டுரைகள், 2013, ப. 204) என்ற கருதுகோளை முன்வைத்துத் தனது ஆய்வு நிலைப்பாட்டை முன்வைத்து உள்ளார். இக்கருதுகோளுக்கு, **கே.என். சிவராசப்பிள்ளையின் பழந்தமிழ் காலவரம்பு என்ற நூலில் சங்க இலக்கியங்களில் காணப்படும் அகச் சான்றுகளைக் குறிப்பிட்டு, காலத்தை நிர்ணயித்துள்ளது. ஐராவதம் மகாதேவன் கண்டுபிடித்த பிராமியக் கல்வெட்டுச் செய்திகள், புகழூர் கல்வெட்டுச் செய்திகள்** (வ.அய். சுப்ரமணியம் கட்டுரைகள், 2013, பக்.204-214) எனப் பல்வேறு கருத்து களைக் கருத்தில் கொண்டு தனது

கருத்துருவாக்கத்தை எடுத்துரைத்துள்ளார். இலக்கியக் கரு, யாப்பு, இலக்கியப் பிரிவுகளின் மரபு முதலியவற்றை ஒப்புநோக்கும் ஆராய்ச்சி முன்னேற்றம் அடைந்தால், இதுவரை தமிழ் இலக்கிய வரலாற்றில் தீர்வு காண முடியாத பல சிக்கல்களுக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தை அடைந்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையில் ஏற்கவே மேற்கொண்ட கால ஆய்வுக் கருத்துகளையும் அவற்றிற்கான தரவு களில் முன்வைத்து தனது கருத்தை நிறுவியுள்ளார்.

குறிஞ்சிப்பாட்டில் ஒரு குறிப்பு என்ற ஆய்வுக் கட்டுரையில், ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு முற்றுபெற்றது என்ற சொற்றொடர் குறிஞ்சிப்பாட்டு இலக்கியத்தின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. எதற்காக இவ்விலக்கியம் பாடப்பட்டது என்பதை எடுத்துரைக்கும் நோக்கில், **கபிலர் அகர முதல் னகர இறுதியாகவுள்ள தமிழ் எழுத்து முப்பதையும் கற்பித்தற்கு இதனைப் பாடினார் எனக் கொள்வதா? அன்றி ஆரிய அரசனைத் தமிழில் விருப்பமுறச் செய்ய இதனைப் பாடினார் எனக் எனக் கருதுவதா? தமிழில் விருப்பமுறச் செய்யவே இதனைப் பாடினார் என்று கொள்வதே பொருந்தும்** (வ.அய். சுப்ரமணியம் கட்டுரைகள், 2017, ப.74) என்ற ஆய்வு முன்கருத்தாக எடுத்துக்கொண்டு இலக்கியக் கருத்துகளை விவாதித்துள்ளார். காதல் அடிப்படையில் மேற்கொள்ளும் இல்லறம் தமிழருக்குச் சிறந்தது என்பது வெளிப்படை. தமிழ் இனத்தின் தனி நாகரிகம் என இதனையே குறிஞ்சிப்பாட்டு கூறுகின்றது. இக்கருத்துருவை உருவாக்க,

காதல் வாழ்க்கையைக் கூறும் அகத்திணை யைக் குறிஞ்சிப்பாட்டு சிறப்பிக்கின்றது. திருக்குறள் குறிஞ்சிப்பாட்டின் கருத்தையையே வற்புறுத்திக் கூறுகின்றது. "அன்பும் அறனும் உடைத்தாயியன் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது (குறள், 45)" மார்ட்டின் லூதர், மனத்தாலும் உடலாலும் இயற்கைக்கு மாறாக நடத்தல் கூடாது என்னும் முடிவை அடிப் படையாகக் கொண்ட பிராட்டஸ்டண்டு மதத்தைத் தோற்றுவித்தார். ஆரிய இலக்கியங் கள், துறவிகளையும் துறவறத்தையும் போற்றுவது யாவரும் அறிந்ததே. ஆனால் சங்க இலக்கியங்களில் இல்லறம் தீதெனத் துறந்தார் என்று கூற ஓர் எடுத்துக்காட்டேனும் காட்ட இயலாது (வ.அய். சுப்ரமணியம், 2017, ப.74-80) போன்ற பல்வேறு கருத்துகளைக் குறிப்பிட்டு, ஆரிய மொழியில் இல்லாத ஒன்று, தமிழுக்கே உரியது என்று கபிலர் குறிஞ்சிப்பாட்டில் பாடியுள்ளார். இதிலிருந்து அகரம் முதல் னகரம் வரை என்ற தமிழ் எழுத்துகளைக் கற்பிக்கப் பாடவில்லை. கருத்தை முதன்மைப் படுத்தும் நோக்கில் பிறமொழிகளில் இல்லாத காதல் இல்லறம் சிறந்தது எனத் தெளிவுப் படுத்தியுள்ளார்.

ச.அகத்தியலிங்கம், கவிதை உருவாக்கம், சங்கத் தமிழ் போன்ற பல்வேறு தமிழியல் ஆய்வு சார்ந்த உருவாக்கங்களைப் படைத்து உள்ளார். சங்கத் தமிழ் என்ற ஆய்வு நூல் வரிசையில் ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. மேனாட்டு மொழிகளுக்கு இருப்பது போன்று இலக்கணம் பண்டைத் தமிழ் மொழிக்கு இல்லையே என்ற எண்ணத்தில் பிறந்தவையே இந்நூல் வரிசையாகும். **தமிழ் இலக்கியங்கள் என்று தோன்றிற்றோ அன்றுமுதல் தேவாரத் திருப்பதிகங்கள் தோன்றிய காலம் எனக் கருதப்படும் கி.பி. ஆறாவது நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் காணப்படும் தண்டமிழ் நூல்களின் மொழி நிலையை ஆராய்வதே "சங்கத் தமிழ்" என்னும் வரிசை நூல்** (அகத்தியலிங்கம், சங்கத் தமிழ், 1983, ப.01) என்ற எடுகோளை முன்வைத்துத் தனது ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

சாதாரண சொற்களை வைத்துக் கால நிர்ணயம் செய்வதைவிட புதிய இலக்கண வடிவங்களை வைத்து நிர்ணயம் செய்வது வலுவுடையது என்று அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார். முன் தமிழ் இலக்கியங்களில் 'யான்' என்ற சொல் காணப்பட, பின்தமிழ் இலக்கியங்களான பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் 'நான்' என்ற சொல் 13 இடங்களில் காணப்படுகின்றது. அதேபோல் இரட்டைப் பன்மைப் பதிலிடு பெயர்கள் எனக் கருதப்படும், யாங்கள், தங்கள், நுங்கள், எங்கள் போன்ற சொற்கள் கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதிக்குத் தொல்காப்பியர் வரையறை தந்துள்ளார். சிலப்பதிகாரம் -16 வெண்பா-1இல் 'தண்ணுமின்கள்' என்ற சொல்லில் 'கள்' இடம்பெற்றுள்ளது. இவ்வாறு என், ஏன், இசின், கும், மார் போன்ற சொற்கள் எந்தெந்த இலக்கியங்களில் எத்தனை முறை பயின்றுவந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டு உள்ளார். இவ்வாய்வில் கருத்துருவாக்க நிலை, **இலக்கியங்களில் கால நிர்ணயம், கால நிர்ணயத்தில் புதிய சொற்கள், பல்வேறு புதிய இலக்கணக் கூறுகள், வடிவங்களின் வரவு எண்ணிக்கை போன்றவை எந்தெந்த இடத்தினைப் பெறுகின்றன என்பதைச் சுட்டிக்**

காட்டி கருத்துருவாக்கம் செய்துள்ளார் (அகத்தியலிங்கம், சங்கத் தமிழ், 1983, ப.1-286) என ஆறு நிலைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சங்கத் தமிழ்-5 வரை ஆய்வு நூலை வெளியிட்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

'சங்க இலக்கியச் செவ்வியல் பண்புகள்' என்ற ஆய்வுக் கட்டுரை, செவ்வியல் கூறுகளைப் பொருத்திப் பார்த்தல் என்ற நிலையில் அமைந்துள்ளது. இக்கட்டுரையின் ஆசிரியர் ச. அகத்தியலிங்கம், **செவ்வியல் இலக்கியம் பற்றிக் கூறுகையில் அதன் பல்வேறு பண்புகள் பற்றிக் குறித்து நிற்பர் அறிஞர் பெருமக்கள். அவற்றை அடிப்படையாக வைத்துச் சங்க இலக்கியங்கள் எவ்வாறு உள்ளன என எண்ணிப் பார்ப்பது நலம் மிகப் பயக்கும்** (அகத்தியலிங்கம், ச., 2010, ப. 126) என்ற கருதுகோளைக் கட்டமைத்து ஆய்வை மேற்கொண்டுள்ளார். கிரேக்க, ரோம இலக்கியங்களில் உள்ள கருத்துகளை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட செவ்வியல் பண்புகளான, அமெரிக்கானா களஞ்சியம் குறிப்பிடும் 1.உன்னதமான ஒரு மேம்பாடு (Excellence), 2.செம்மாந்த குறிக்கோள் (Value), 3.சிறந்த ஒரு நிலைபேறு (Permanence) ஆகியவற்றைப் பொருத்திப் பார்த்துள்ளார். கருத்துருவாக்க அடைவுகளாக, **குடிபழி தூற்றுங் கோலேனாகுக (புறம்.72), திறவா தடைத் திண்ணிலைக் தவின் .நீண்மதி லொருசிறை யொடுங்குதல் நாணுத் தகவுடைதிது காணும் காலே (புறம்.4) பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் (புறம்.182) ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைகவென் னிவரை (புறம்.72)** (அகத்திய லிங்கம், ச., 2010, பக்.126-132) போன்ற சங்க இலக்கியப் பாடல்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், செம்மையான வாழ்வியல் கொள்கைகள், சிறந்த கோட்பாடுகள், ஏற்றமிகு எண்ணங்கள, எழில்மிகு குறிக்கோள்கள் போன்ற செவ்வியல் பண்புகள் வெளிப் படுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

தமிழ் மொழியை உள்ளடக்கி நிகழ்த்தப்படும் ஆய்வுகள் அனைத்தும் தமிழியல் என்ற துறைக்குள் அடங்கும். தமிழியல் ஆய்வுகளை மொழியியல் அறிஞர்களும் மேற்கொண்டு உள்ளனர். தமிழியல் ஆய்வுகளில்காணப்படும் இடைவெளி மற்றும் முதன்மைப்படுத்தியே தங்கள் கருதுகோள்களைக் கட்டமைத்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது புலப்படுகிறது. கருதுகோள்களுக்குரிய சான்று களை எடுத்துரைத்துரைத்தல், விளக்குதல், ஒப்பிடுதல், பொருத்திப் பார்த்தல் போன்ற தன்மைகளில் தங்கள் கருத்துருவாக்கங்களைக் கட்டமைத்துள்ளனர் தமிழ்மொழி இழிவழக் கற்றது; செம்மொழி; தொன்மையான மொழி ஆகிய கருத்துகளை நிலைநிறுத்த, இலக்கியம், இலக்கண நூல்கள், உரையாசிரியர்கள், வெளிநாட்டார் எழுதிய இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுகள் போன்ற பல்வேறு சான்றுகளைக் கொண்டும் கருத்துருவாக்கம் செய்துள்ளதை அறிமுடிகிறது. இவ்வாறு கருதுகோள்களுக்கு ஏற்பக் கருத்துருவாக்கங் களைக் கட்டமைத்து மொழியியல் அறிஞர்கள் தமிழியல் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது தெளிவடைகிறது. ஒட்டுமொத்த அறிஞர்களின் தமிழியல் ஆய்வுப் பொருண்மை களில் கவனம் செலுத்தினால் அறிவியல் நெறிப்பட்டப் பல்வேறு ஆய்வு முறைமைகளைக் கண்டடையலாம்.

பயன்பட்ட நூல்கள்

* அகத்தியலிங்கம், ச. (1983), சங்கத் தமிழ் -1, மொழியில் நோக்கில் சங்கம் இலக்கியம், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 608002.
* அருண் சுப்பிரமணியம் (தொகுப்பு.), 2013, வ.அய். சுப்ரமணியம் கட்டுரைகள், தொகுதி - 2, அடையாளம் பதிப்பகம், திருச்சி - 621310.
* இராமலிங்கம், அரங்க. (தொகுப்பு.), 2021, தமிழ் நாகரிகமும் தமிழ்மொழி வரலாறும், தொகுதி-9, வர்தமான் பதிப்பகம், சென்னை-600 017.
* க்ரியா (2020). தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா பதிப்பகம், திருவான்மையூர், சென்னை- 600 041.
* கந்தசாமி, சோ.ந. (பதிப்பு.), 2010, தமிழ்க்கலை-செம்மொழி மாநாட்டுச் சிறப்பு வெளியீடு, மேக்ரோ பிரஸ், கேளாம்பாக்கம், சென்னை – 603 103.
* சண்முகம், செ., 2009, அறிவியல் நோக்கில் மொழி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -600 113.
* ஜெயா அரிகரன், (தொகுப்பு.) 2017, வ.அய்.சுப்ரமணியம் கட்டுரைகள், தொகுதி-1, அடையாளம் பதிப்பகம், திருச்சி - 621310.